V9T

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 9

தமிழ்

நேரம்: 1.30 மணி

மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!
- இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் .............

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

2) 'மல்லல் மூதூர் வய வேந்தே' - 'மல்லல்' இச்சொல்லின் பொருள்

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

3) நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

4) உலகத் தாய்மொழி நாள் .............

அ) பிப்ரவரி 21 ஆ) பிப்ரவரி 28 இ) ஜனவரி 26 ஈ) பிப்ரவரி 14

5) 'முத்திக் கனி' இலக்கணக்குறிப்பு .............

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) உருவகம் ஈ) பெயரெச்சம்

6) தமிழ்விடுதூது ............. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

7) **பொருத்தமான வினையை எடுத்து எழுதுக:**
கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக .............
அவன் பையன் பள்ளியில் இருந்து இன்னும் .............

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

8) ''மிசை'' என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை அளிக்க:** **3×2=6**

9) ''கூவல்'' என்று அழைக்கப்படுவது எது?

10) ''மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்'' - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?

11) 'கண்ணணி' என்பதன் விளக்கம் யாது?

12) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை அளிக்க:** **3×2=6**

13) **தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க:**
கற்றோர்க்குச் சென்ற ...............
கல்லாடம் படித்தவரோடு ...............

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14) **பிழை நீக்கி எழுதுக:**

அ) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.

ஆ) சூறாவளியின் போது மேல் மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பாள்.

15) **கலைச்சொல் தருக:**

அ) Lexicon

ஆ) Irrigation Technology

16) **அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி கோடிட்ட இடங்களில் எழுதுக:**

அ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ............ (செல்)

ஆ) உலகில் மூவாயிரம் மொழிகள் ............ (பேசு)

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை அளிக்க:** **4×3=12**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்கவும்.**

17) 'மூன்று' என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

18) "புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்" - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

19) சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

20) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

21) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

22) "நீர் இன்று அமையா யாக்கைக்கு" - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

**V. விடையளிக்க:** **2×5=10**

23) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.

24) உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

**(அல்லது)**

சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

**VI. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி:** **1×8=8**

25) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com